கவனிக்க .- 2015.08.14 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II, பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1929 - 2015 අගෝස්තු මස 21 වැනි සිකුරාදා - 2015.08.21

1929 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

	பக்கம்
சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்	-
சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்	586
அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்	-
அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும்	-
நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும்	-
மற்றைய நியமனங்களும் பிறவும்	-
பதிவாளர் நியமனங்களும் பிறவும்	-
அரசாங்க அறிவித்தல்கள்	586
விலைக் கட்டளைகள்	-
இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்	-
இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள்	-
வரவு செலவுத் திரட்டுக்கள்	589
அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்	597
மாலுமிகளுக்கு அறிவித்தல்கள்	-
மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்	-

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, ஓகத்து மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டு மென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2015 இன் இல. 345

எஸ்எம்டி/டிஈஎப்/9/26/டி/என்சீசீ.

தேசிய மாணவ வீரர் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நியமனம்

மேஜர் ஜெனரல் எல்டப்சீவ்வீ ராஜகுரு, ஆர்டப்பீ ஆர்எஸ்பீ, யூஎஸ்பீ அவர்கள், 2015, மாச்சு மாதம் 09 ஆந் திகதியிலிருந்து தேசிய மாணவ வீரர் படையின் பணிப்பாளராக அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளார்:-

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

ஏ. பீ. ஜீ. கித்சிறி,
செயலாளர்,
பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு.

கொழும்பு,
2015, மாச்சு 09.

8-506

அரசாங்க அறிவித்தல்கள்

காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 120) கீழான அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் இரண்டாவது நிரலில் குறிப்பிடப்படும் காணி மற்றும் மூன்றாவது நிரலில் குறிப்பிடப்பட்டிருக்கும் உறுதிகளுக்குரிய முதலாவது நிரலில் காணப்படும் தற்பொழுது சிதைவடைந்து அல்லது கிழிந்து போயுள்ள காணியினை பதிவு செய்த புத்தகம்/ ஏடு மீண்டும் பூரணமாக தற்காலிகமாக தயாரிக்கப்பட்டுள்ளதனால் காணியினை பதிவு செய்த புத்தகங்களில் மீள தயாரிக்கப்பட்ட ஏடு பற்றிய (120 ஆம் அத்தியாயமான) கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவிற்கிணங்க இத்தால் அறிவிக்கின்றேன்.

2. 2015.08.21 ஆந் திகதி தொடக்கம் 2015.09.04 ஆந் திகதிவரை அனைத்து வேலை நாட்களிலும் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் எந்தவொரு நபருக்கும் மேற்குறிப்பிடப்பட்ட தற்காலிக ஏட்டினை தெல்கந்தை காணிப் பதிவகத்தில் பரிசீலனை செய்ய முடியும்.

3. அத்தற்காலிக ஏட்டில் எதுவிதமான அல்லது அதன் குறிப்பில் அடங்கியுள்ள எந்தவொரு விடயம் தொடர்பாக எதுவிதமான ஆட்சேபனையினை வெளிப்படுத்துவதற்கு விரும்பும் நபர் அல்லது ஏதாவது குறிப்பு அல்லது ஏதாவது குறிப்பினால் விடப்பட்டிருக்கும் விடயத்தினை சேர்ப்பதற்கு வேண்டுகோளினை சமர்ப்பிக்கும் நபர் அந்த ஆட்சேபனையினை அல்லது வேண்டுகோள் அடங்கிய கடிதத்தினை விபரத்துடன் தெளிவாக அதனை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் 2015.09.11 ஆந் திகதிக்கு முன்பதாக இங்கு கீழ் கையொப்பமிடப்பட்டவருக்கு கிடைக்கக்கூடியதாக பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

அட்டவணை

நிரல் I	*நிரல் II*	*நிரல் III*
பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் பழுதடைந்த ஏடுகளின் விபரங்கள்	*காணியின் விபரங்கள்*	*பதிவு செய்யப்பட்ட உறுதிகளின் விபரங்கள்*
கொழும்பு மாவட்டத் தின் தெல்கந்தை காணிப்பதிவகத்தில் M ஆம் பிரிவின் 438 வது புத்தகத்தின் 284 வது ஏடு.	மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தின் பல்லேபற்று சல்பிட்டி கோறளையில் எத்துல்கோட்டையில் அமைந்துள்ள "திம்பிரிகஹவத்த" என்னும் இடத்திலிருந்து பிரித்தொதுக் கப்பட்ட காணித்துண்டின் எல்லைகள் :- வடக்கு : பி. ஹெந்திரிக் குரே இற்கு உரித்தான இந்தக் காணியின் பகுதி ; கிழக்கு : இந்தக் காணியின் எஞ்சிய பகுதி ;	1. எஸ். டபிள்யூ. பெரேரா பி. நொ. ஆல் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 1942.11.07 ஆந் திகதிய 3361 ஆம் இலக்கமுடைய அறுதி உறுதி. 2. சந்ரசேன தலுவத்த பி. நொ. ஆல் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 1965.02.20 ஆந் திகதிய 78 ஆம் இலக்கமுடைய அறுதி உறுதி.

நிரல் I	நிரல் II	நிரல் III
பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் பழுதடைந்த ஏடுகளின் விபரங்கள்	காணியின் விபரங்கள்	பதிவு செய்யப்பட்ட உறுதிகளின் விபரங்கள்
	தெற்கு : செலினா சேபத் உரிமைகோரும் திம்பிரிகஹவத்த ; மேற்கு : கொழும்பு- கோட்டை வீதி	3. ஜே. கே. லியனசூரிய பி. நொ. ஆல் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 1968.04.08 ஆந் திகதிய 283 ஆம் இலக்கமுடைய ஈட்டு உறுதி.
	விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 13பே.	4. ஜே. கே. லியனசூரிய பி. நொ. ஆல் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 1969.03.07 ஆந் திகதிய 332 ஆம் இலக்கமுடைய அறுதி உறுதி.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

எனது இல. : ஆர்ஜீ/என்பீ/11/2/46/2015/ஏடு. தயாரித்தல்.
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

8-504

பதுளை கதிர்காம தேவாலயத்தின் வருடாந்த பெரஹரா ஊர்வலம்

(362 ஆம் அத்தியாயமான) யாத்திரைகள் கட்டளைச் சட்டத்தின்படி வெளியிட்டுள்ள 1948, செத்தெம்பர் 10 ஆந் திகதிய 9902 ஆம் இலக்க வர்த்தமானி, 1951 ஓகத்து 17 ஆந் திகதிய 10283 இலக்க வர்த்தமானி, 1955, மாச்சு 25 ஆந் திகதிய 14778 ஆம் இலக்க வர்த்தமானி யினூடாகவும், 1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க அதிகாரம் வழங்கல் (பிரதேச செயாளர்களுக்கு) சட்டத்தின் ஊடாக 2009.10.02 ஆந் திகதிய 1622 ஆம் இலக்க வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட பதுளை கதிர்காம தேவாலய (வருடாந்த பெரஹரா) தொடர்பான சட்டக்கோவையின்படி பதுளை பிரதேச செயலாளர் பீ. எஸ். பீ. அபேவர்தன ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 2015, பதுளை கதிர்காம தேவாலயத்தின் வருடாந்த பெரஹரா தொடர்பாக பின்வருவனவற்றை ஆணையிடுகின்றேன்.

1. 2015, செத்தெம்பர் 14 ஆந் திகதி "கப்" நடுகையோடு பதுளை கதிர்காம தேவாலய வருடாந்த பெரஹரா ஆரம்பமாகி, 2015, செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி முதல் 18 ஆந் திகதி வரை (5 நாட்கள்) உள்ளக பெரஹரா, 2015, ஓகத்து மாதம் 31 ஆந் திகதி முதல் செத்தெம்பர் 04 ஆந் திகதி வரை (5 நாட்கள்) குபல் பெரஹரா, 2015, செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதி முதல் 23 ஆம் திகதி வரை (5 நாட்கள்) ரந்தோலி பெரஹரா, 2015, செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதி அதிகாலை நீர்வெட்டும் வைபவம், 2015, செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதி மதியம் பெரஹரா உள்நுழைவோடு முடிவடையும் என்பதை அறிவித்துக் கொள்கின்றேன்.

2. பெரஹராவின் பயணப் பாதை.

3. பதுளை கதிர்காம தேவாலயத்தில் இருந்து பதுளை லோவர் வீதி, பஸ்ஸரை வீதி, (முதியங்கனை சுற்றுவட்டம்), லொன்டன் வீதி, அனகாரிக தர்மபால மாவத்தை, கொக்கோவத்தை வீதி, உதயராஜ மாவத்தை, கிங்ஸ் வீதி, கடை வீதி, லோவர் வீதி, பதுளை கதிர்காம தேவாலயத்திற்கு நுழைதல்.

4. பதுளை கதிர்காம தேவாலயத்தின் காணியினுள் மற்றும் தேவாலயத்திற்குரிய சிம்மாசனம் அமைந்துள்ள காணி ஆகிய இடங்களிலும் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் உணவு சமைப்பது மற்றும் வியாபாரம் செய்வதைத் தடை செய்கின்றேன்.

5. பெரஹரா நாட்களில் பிரதான வீதிகளில் தனியார் வாகனங்கள் நிறுத்தி வைப்பதைத் தடைசெய்வதுடன், துவிச்சக்கர வண்டி மற்றும் தள்ளுவண்டிகள் உட்பட அனைத்து வாகனங்களும் என்னிடம் அல்லது தேவாலய பொறுப்பு நிலமே அவர்களிடம் அனுமதிப்பத்திரம் பெறாமல் தேவாலய காணியினுள் நுழைவதை தடை செய்கிறேன்.

6. பெரஹரா பயணிக்கும் பாதையில் பதுளை மாநகர சபையின் மூலம் முறையான அனுமதியுடன் அமைக்கப்பட்ட கட்டிடங்கள் மற்றும் தற்போதுள்ள நிலையான கட்டிடங்கள் சுகாதார திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும். காணித்துண்டுகளை வாடகைக்கு எடுக்கும் வியாபாரிகள் தாம் தேவாலய பெரஹராவின் பின்னர் தமது தற்காலிக கட்டிடங்களை அப்புறப்படுத்தியதன் பின்னர் பெரஹரா பயணிக்கும் பாதை மற்றும் தேவாலய காணியினுள் பொலித்தீன் உட்பட அனைத்து விதமான கழிவுகளையும் ஒன்று சேர்த்து மக்கள் பொது சுகாதார பரிசோதகர்களின் அறிவுறுத்தலின் பிரகாரம் அகற்றுதல் வேண்டும்.

7. என்னிடம் பெற்றுக் கொண்ட அனுமதிப்பத்திரம் இன்றி புனித பூமியினுள் மற்றும் அதன் பகுதிகளில் எந்த வித தற்காலிகமாகக் கூட கட்டிடம் அமைப்பதைத் தடை செய்கின்றேன்.

8. எவரும் எனது அல்லது பதுளை மாநகர சபையின் மூலம் அனுமதி பெற்றுக் கொள்ளாமல் பாதையாகப் பயன்படுத்தப்படும் அல்லது வேறாக்கப்பட்ட அல்லது ஏதாவது நிலம் அல்லது புனித பூமி பிரதேசத்தினுள் ஏதாவது நிலத்தை அடிப்படையாக கொண்டு கூடாரம் அல்லது ஏதாவது கட்டிடம் ஒன்றை அமைப்பது அல்லது பெரிதாக்குவது செய்தல் கூடாது.

9. பட்டாசு வெடி, பிரதேசத்தினுள் கொளுத்துவது தடைசெய்யப் பட்டுள்ளது.

10. பிரதேச செயலாளரின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் அனுமதியின்றி எந்த ஒரு நபரும் இலக்கம் 3 இல் குறிப்பிட்டுள்ள பாசறைப் பிரதேசத்தில் டிக்கட்டுகள், கொடி போன்றவை விற்றல் அல்லது வேறு விதமான முறையில் எந்த ஒரு நிதி அறவிடலும் செய்யக் கூடாது.

பீ. எஸ். பீ. அபேவர்தன,
பிரதேச செயலாளர்,
பதுளை.

பதுளை,
பிரதேச செயலகம்,
2015, ஓகத்து 01.

8-592

மாத்தறை பினர மஹா பெரஹரா

தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில் நடாத்தப்பட்டு வரும் 2015 ஆம் ஆண்டுக்கான பினர மஹா பெரஹரா 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி நடாத்தப்படும் என யாத்திரிகள் கட்டளைச் சட்டத்தின் (175 ஆம் அத்தியாயம்) கீழ் 1959 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெளியிடப்பட்ட 11959 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகளின் 10 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறியத்தருகின்றேன்.

ரஞ்சித் யாபா,
பிரதேச செயலாளர்,
மாத்தறை.

மாத்தறை
பிரதேச சபை,
2015, யூலை 30.

8-593

யாத்திரிகைகள் கட்டளைச் சட்டம் - (175 ஆம் அத்தியாயம்)

அதுரலிய யஹமுள்ள போதிருக்காராம கம்பார தேவாலயத்தின் அசெல பெரஹரா - 2015

தென் மாகாணத்திலே மாத்தறை மாவட்டத்திலே அதுரலிய பிரதேச செயலாளர் பிரிவிலே யஹமுள்ள போதிருக்காராம கம்பார தேவாலயத்தின் வருடாந்த அசெல பெரஹரா 2015, ஓகத்து மாதம் 25 ஆந் திகதி ஆரம்பமாகி 2015, ஓகத்து மாதம் 31 ஆந் திகதி முடிவுறும் என்பதை (175 ஆம் அத்தியாயமான) யாத்திரிகைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட 2012, யூன் மாதம் 07 ஆந் திகதிய 1709/14 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் 2 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறியத் தரப்படுகின்றது.

2012, யூன் மாதம் 07 ஆந் திகதிய 1709/14 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் மேற்கூறப்பட்ட காலப் பிரிவில் குறித்த ஒழுங்கு விதிகளின் கீழ் 2 ஆம் உப பிரிவில் விபரிக்கப்படுகின்ற "கந்தவுற துல" எல்லையில் அமுலாகும்.

டீ. ஜீ. சரத்குமார,
பிரதேச செயலாளர்,
அதுரலிய.

பிரதேச செயலகம்,
அதுரலிய.
2015, யூலை 29.

8-489

காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல் (அத்தியாயம் 120)

கீழ்க்குறிப்பிட்ட அட்டவணையில் காணப்படும் II ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் I ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமான III ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின்கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.

2. 2015.08.14 ஆந் திகதி தொடக்கம் 2015.08.28 ஆந் திகதிவரை அனைத்து வேலை நாட்களிலும் மு. ப. 10.00 மணி தொடக்கம் பி. ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு கொழும்பு காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.

3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமான எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது

பெயருக்கு, எழுத்துமூலம் 2015.09.04 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

அட்டவணை

நிரல் I பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் பழுதடைந்த ஏடுகளின் விபரங்கள்	நிரல் II காணியின் விபரங்கள்	நிரல் III பதிவு செய்யப்பட்ட உறுதிகளின் விபரங்கள்
கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு காணிப் பதிவகத்தில் வெல்ல பிரிவில் 57 ஆவது புத்தகத்தின் 171 மற்றும் 172 வது ஏடுகள்.	மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தின் பல்லேபற்று சல்பிட்டி கோறளையில் வெள்ளவத்தையில் அமைந்துள்ள "பிம்பியாகஹவத்த மற்றும் பிம்பியாகஹ குருந்துவத்த" என்னும் இடத்திற்கு ஆர். பி. பெரேரா நிலஅளவையாளரினால் 1951.09.07 ஆந் திகதி அளவிட்டு தயாரிக்கப்பட்ட இலக்கம் D/26 உடைய அளவீட்டின் பிரகாரம் லொட் 162ஏ1 இற்கான எல்லைகள் :- வடக்கு : பாதை (தனியார்) லொட் 159சீ மற்றும் 162பி ; கிழக்கு : லொட் 162ஏ7 (பாதைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது); தெற்கு : லொட் 162ஏ2 ; மேற்கு : லொட் 159ஏ (இந்தக் காணியின் எஞ்சிய பகுதி). பரிமாணம் : 0ஏ. 0றூ. 21பே.	1. ஜே. எஸ்.பரணவிதான பி. நொ. ஆல் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 1953.10.08 ஆந் திகதிய 3237 ஆம் இலக்கமுடைய அறுதி உறுதி. 2.எஸ். குணசேகர பி.நொ.ஆல் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 1955.06.27 ஆந் திகதிய 125 ஆம் இலக்கமுடைய ஈட்டு உறுதி. 3.எஸ். குணசேகர பி.நொ.ஆல் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 1955.06.27 ஆந் திகதிய 125 ஆம் இலக்கமுடைய ஈட்டுமுறியை இரத்துச் செய்தல் உறுதி. 4.எம். எஸ். டி. எஸ். காசிசெட்டி பி.நொ. ஆல் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 1983.01.23 ஆந் திகதிய 2637 ஆம் இலக்கமுடைய அதிகார அளிப்பு.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

எமது இல. : ஆர்ஜீ/என்பீ/11/2/41/2015/ஏடு. தயாரித்தல்.
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

8-640

வரவு செலவுத் திரட்டுக்கள்

கொழும்புப் பல்கலைக்கழகம்

2013, திசெம்பர் 31 இல் இருந்தவாறு நிதி நிலைபற்றிய கூற்று

(தொகைகள் கிட்டிய ரூபாவிற்கு சீராக்கப்பட்டன)

		2013		2012	
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா
சொத்துக்கள்					
நடைமுறைச்சொத்துக்கள் :					
காசும் காசுக்குச் சமமானவையும்	3	10,96,76,660		9,81,86,029	
வழங்கல்கள், சேவைகளுக்கு முற்பணங்கள்	4	1,94,80,385		1,52,45,341	
நானாவித முற்பணங்கள்	5	57,76,672		45,69,215	
முற்கொடுப்பனவுகள்		50,83,907		25,76,762	
பட்டோலைகள், இருப்புகள்		1,11,06,917		1,25,94,479	
சில்லறைக் கடன்பெற்றோர்	6	**30,60,29,770**	**45,71,54,312**	**11,86,25,572**	**25,17,97,398**

		2013		2012	
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா
நிலையான சொத்துக்கள் :					
பணியாளர்களுக்குக் கடன்கள், முற்பணங்கள்	7	13,52,06,045		13,03,56,425	
வழங்கல்கள், சேவைகளுக்கான முற்பணம்	4	1,39,08,032		1,23,26,737	
நானாவித முற்பணங்கள்	5	13,49,182		8,57,930	
சில்லறைக் கடன்பெற்றோர்	6	1,35,48,630		6,92,10,198	
முதலீடுகள்	8	1,51,49,59,640		1,34,55,79,120	
ஆதனம், பொறித்தொகுதி, சாதனம்	9	40,75,32,01,148		1,51,21,41,900	
நடைபெறும் வேலைகள்	10	34,10,05,087	**42,77,31,77,766**	34,29,12,438	**3,41,33,84,747**
மொத்தச் சொத்துக்கள்			**43,23,03,32,078**		**3,66,51,82,145**
பொறுப்புக்கள்					
நடைமுறைப் பொறுப்புக்கள் :					
சென்மதிக் கணக்குகள்	11	3,75,58,352		9,75,10,169	
அட்டுறு செலவுகள்		15,89,61,986		4,48,75,793	
மீளளிப்பு வைப்புக்கள்	12	**44,14,491**	**20,09,34,829**	**65,77,256**	**14,89,63,219**
நிலையான பொறுப்புகள் :					
பிற்போடப்பட்ட வருமானம் நீடிப்புக் கல்விநெறிகள்		34,02,66,781		32,28,46,396	
பிற்போடப்பட்ட வருமானம், ஆராய்ச்சி மானியம் நிலையம்		11,30,82,380		11,98,64,820	
பணிக்கொடைக்கு ஏற்பாடு		40,68,39,877		37,32,97,140	
சென்மதிக் கணக்குகள்	11	1,15,47,348		10,38,02,544	
மீளளிப்பு வைப்புகள்	12	2,34,17,897	89,51,54,282	1,73,85,124	93,71,96,025
மொத்தப் பொறுப்புகள்			1,09,60,89,110		1,08,61,59,244
தேறிய சொத்து			42,13,42,42,967		2,57,90,22,901
உரிமைப்பங்கு/ தேறிய சொத்து					
மூலதனம் :					
மூலதன மானியம் - செலவிட்டது	13	2,22,11,75,335		1,77,45,95,346	
மூலதன மானியம் - செலவிடாதது	14	25,03,34,618		11,75,43,797	
கொடைகள், நன்கொடைகள்	15	25,35,87,977	2,72,50,97,930	26,54,74,241	2,15,76,13,384
திரண்ட நிதி :					
பொது ஒதுக்கம்		1,90,04,980		1,90,04,980	
வரவு செலவுக் கணக்கு		(50,50,28,176)		(50,01,63,875)	
சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கு		38,94,01,94,323	38,45,41,71,127	5,32,61,235	(42,78,97,661)

		2013		2012	
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா
ஒதுக்கங்களும் வரையறுத்த நிதிகளும் :					
குறித்த ஒதுக்கங்கள்	16	86,15,97,117		75,29,69,080	
அறக்கொடை நிதி		9,03,06,796		8,11,73,951	
கொடைகள், நன்கொடைகள்		30,214		30,214	
ஏனையவை	17	30,39,783	95,49,73,910	1,51,33,933	84,93,07,177
மொத்த உரிமைப் பங்கு/தேறிய சொத்து			42,13,42,42,967		2,57,90,22,901

தயாரித்தவர்:
ஜீ. எச். காமினி,
பிரதி நிதியாளர்.

சான்றுப்படுத்தியவர்:
கே. எஸ். ரி. சுவர்ணலதா ஜயசூரிய,
நிதியாளர்.

பேரவைக்காகவும் அதன் சார்பாகவும்,

(பேராசிரியர்) டபிள்யூ. கே. ஹிரிம்புறேகம,
உபவேந்தர்.

கே. ஏ. எஸ். எட்வேர்ட்,
பதிவாளர்.

கொழும்புப் பல்கலைக்கழகம்

2013, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான
நிதி செயல்நிறைவேற்றக் கூற்று
(தொகைகள் கிட்டிய ரூபாவிற்கு சீராக்கப்பட்டன)

	2013		2012	
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
வருவாய்				
அரசாங்க மானியம் :				
(அ) மீண்டுவருஞ் செலவுக்கு அரச மானியம்	1,58,16,92,000		1,27,03,90,000	
(ஆ) புனரமைப்பு, மூலதனச் சொத்துக்களின் பேணலுக்கு அரச மானியம்	4,41,41,915		4,33,00,377	
(இ) மூலதன மானியக் கடன் தீர்த்தல்	23,42,68,076		22,71,40,494	
(ஈ) உதவுத்தொகைக்கு மானியம்	3,33,68,200		2,09,80,500	
(உ) மகாபொலவுக்கு மானியம் :				
(i) பமாஆ	1,31,10,650		1,54,83,650	
(ii) மகாபொல நம்பிக்கை நிதிக் கூறு	8,11,98,650		8,49,86,450	
(ஊ) இலங்கைப் பல்கலைக்கழகங்களைச் சர்வதேச மயமாக்குதல்	1,68,90,517		73,33,613	
(எ) ப. மா. ஆ. மானியம் நிலுவை - ஊ.சே.நி., ப.சே.நி.	1,43,07,892		-	
(ஏ) ப.மா.ஆ. மானியம் ப.அ.ந.க்கு	10,31,004	2,02,00,08,903	-	1,66,96,15,084
பதிவுக் கட்டணம் (பட்ட மாணவர்)	49,67,010		14,29,585	
பதிவுக் கட்டணம் (பட்டப்பின் மாணவர்)	10,54,000		4,09,225	
பரீட்சைக் கட்டணம் (பட்ட மாணவர்)	1,38,100		1,24,015	
பரீட்சைக் கட்டணம் (பட்டப்பின் மாணவர்)	3,66,500		3,56,555	
போதனைக் கட்டணம் (பட்ட மாணவர்)	2,89,76,560		26,86,268	
போதனைக் கட்டணம் (பட்டப்பின் மாணவர்)	44,88,500		28,00,000	
கடன்கள், முற்பணங்களிலிருந்து வட்டி	51,99,955		51,69,042	
முதலீடுகளிலிருந்து வட்டி	13,03,89,806		5,88,75,025	
வெளியீடுகளின் விற்பனை	-		425	
பழைய இருப்புகளின் /கழித்தவற்றின் விற்பனை	1,081		2,10,286	
ஆதனங்களிலிருந்து வாடகை	12,97,493		8,40,233	
மருத்துவக் கட்டணம்	19,74,400		2,75,300	
நூலகத் தண்டங்கள்	9,33,297		9,21,840	

	குறிப்பு	2013		2012	
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா
துணை நடவடிக்கைகள்		45,66,790		18,53,735	
நானாவிதப் பெறுகைகள்		4,40,59,173		1,46,48,691	
கேள்விக் கட்டணம்		85,750		-	
செலாவணி ஆதாயம்		8,209		13,69,042	
முறிகளின் மீறலிலிருந்து வருமானம்		85,14,994		56,23,282	
சொத்துகள் கையுதிர்ப்பு ஆதாயம்		-		1,43,750	
நீடிப்பு நெறிகளிலிருந்து வருமானம்	18	46,32,26,791		30,77,55,601	
ஆரா. மானியம், நிலையம், நிதிகளிலிருந்து வருமானம்		15,32,24,069		15,25,06,301	
நீடிப்புக் கல்விநெறிகள் உருவாக்கிய வருமானம்		47,06,637		58,98,107	
அறக்கொடைகளிலிருந்து பெறுகைகள்		1,72,965	**85,83,52,079**	14,70,866	**56,53,67,173**
மொத்த வருமானம்			**2,87,83,60,983**		**2,23,49,82,258**
செலவினம்					
1. ஆளணி ஊதியங்கள்					
சம்பளங்கள், கூலிகள்	19	59,62,13,059		53,89,41,584	
ப.சே.நிதி	19	10,42,84,439		7,54,89,070	
ஓய்வூதியம்	19	3,23,98,775		2,22,86,677	
ஊ.ந.நி.	19	3,20,22,779		1,95,46,999	
பதிற் கடமை கொடுப்பனவு	19	5,46,389		4,05,930	
மேலதிக நேரம்	19	3,18,35,116		2,62,93‘532	
விடுமுறைக் கொடுப்பனவுகள்	19	2,92,044		2,15,931	
வேறு படிகள்	19	42,42,75,068		32,43,98,492	
ஆராய்ச்சிப்படி	19	9,28,88,805	1,31,47,56,475	5,83,66,090	1,06,59,44,306
2. பிற மீண்டுவரும் செலவினம்					
பிரயாணம்	19	47,26,142		36,74,727	
வழங்கல்கள்	19	8,23,44,742		6,54,15,177	
சொத்துக்களைப் பேணல்	19	3,09,54,150		2,49,13,747	
ஒப்பந்தச் சேவைகள்	19	24,21,10,503		21,87,85,737	
ஏனையவை	19	7,02,05,427	43,03,40,964	3,86,41,767	35,14,31,155
			1,74,50,97,439		1,41,73,75,461
(i) மகாபொல புலமைப் பரிசுகள் - பமாஆ	19	1,31,30,000		1,54,83,650	
(ii) மகாபொல நம்பிக்கை நிதிக் கூறு (செலவு)	19	8,11,98,650		8,49,86,450	
கல்வி உதவுத்தொகை	19	3,33,56,200		2,09,61,500	
தேய்மானம்		25,64,28,015		22,71,40,494	
பணிக்கொடை		6,23,29,365		8,22,36,371	
நீடிப்பு நெறிகளின் செலவு	18	25,48,02,851		14,81,31,166	
ஆரா. மானியம், நிலையம், நிதிகளின் செலவு		15,32,24,069		15,25,06,301	
அறக்கொடைகள், புலமைப்பரிசுகள்		1,72,965		14,70,866	
கட்டடம் மீண்டுவரும் செலவு- (புனரமைப்பு)	19	4,41,41,915		4,33,00,377	
இலங்கைப் பல்கலைக்கழகங்களைச் சர்வதேச மயமாக்குவதற்கான செலவு	19	1,68,90,517		73,33,613	
நிலையான சொத்துக்கள் கையுதிர்ப்பில் நட்டம்		32,49,528	91,89,24,076	10,22,573	78,45,73,362
செலவினத்தின் மீது வருமான மிகை			21,43,39,468		3,30,33,435

காசுப் பாய்வுக் கூற்று

2013, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவாக்கிய (பயன்படுத்திய காசுப்பாய்வுகள்)

	ரூபா	ரூபா
சாதாரண நடவடிக்கைகளிலிருந்து மேலதிகம்		21,43,39,468
காசு அல்லாத அசைவுகள்		
தேய்மானம்	25,64,28,015.00	
நிலையான சொத்துக்களின் கடன் தீர்த்தல்	(23,42,68,076.00)	
பணிக்கொடைக்கு ஏற்பாடு	6,23,29,365.00	
வட்டி வருமானம்	(13,03,89,806.00)	
கைவரப்பெறாத அந்நிய நாணய ஆதாயம்	(8,209,00)	
சொத்துக்களின் கையுதிர்ப்பின் மீது நட்டம்	32,49,528.00	
முந்திய ஆண்டு சீராக்கங்கள்		(4,26,59,183)
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னர் தொழிற்பாட்டுப் பற்றாக்குறை		17,16.80,285
தொழிற்படுமூலதனச் சீராக்கம்		
களஞ்சியங்கள், பட்டோலைகளில் (அதிகரிப்பு/குறைவு)	14,88,643	
பிற வருமதிகளில் (அதிகரிப்பு/குறைவு)	10,48,71,968	
பணிக்கொடைக் கொடுப்பனவுகள்	(2,67,39,206)	
கொடுப்பனவுகளில் (அதிகரிப்பு/குறைவு)	(3,42,50,813)	
பிற்போடப்பட்ட வருமானத்தில் (அதிகரிப்பு/குறைவு)	1,06,37,945	5,60,08,537
		22,76,88,822
தொழிற்படு நடவடிக்கைகளில் பயன்படுத்திய தேசிய காசுப் பாய்வுகள்		
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து இருந்து/(பயன்படுத்திய) காசுப்பாய்வுகள்		22,76,88,822
நிலையான சொத்துக்கள் சுவீகரிப்பு	(42,81,74,119)	
நடைபெறும் வேலை	(12,92,70,620)	
முதலீடுகளில் அதிகரிப்பு	(16,93,80,520)	
முதலிடுகளிலிருந்து வட்டி	13,03,89,806	
கையுதிர்த்த நிலையான சொத்து விற்பனை வருவாய்	38,03,852	
முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்திய தேறிய காசுப்பாய்வுகள்		(59,26,31,601)
நிதியிடல் நடவடிக்கைகளில்இருந்து (பயன்டுத்திய) காசுப்பாய்வுகள்		
மூலதனச் செலவுக்கு அரச மானியம்	35,91,50,000	
உள்ளக நிதியின் தேறிய பெறுகைகள்	1,72,83,410	
நிதியிடல் நடவடிக்கைகளில் இருந்து தேறிய காசுப்பாய்வுகள்		37,64,33,410
காசு, காசுக்குச் சமமானவற்றில் தேறிய அதிகரிப்பு		1,14,90,631
காலத் தொடக்கத்தில் காசும் காசுக்குச் சமமானவையும்	9,81,86,029	
கால முடிவில் காசும் காசுக்குச் சமமானவையும்	10,96,76,660	
காசு, காசுக்குச் சமமானவற்றில் தேறிய அதிகரிப்பு	1,14,90,631	

கொழும்பு பல்கலைக்கழகம்

உரிமைப்பங்கில்/தேறிய சொத்துக்ளில் மாற்றம் பற்றியகூற்று

2013, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு

விவரம்	செலவிட்ட மூலதன மானியம்	செலவிடாத மூலதன மானியம்	ஒதுக்கங்கள் வரையறுத்த நிதி	கொடைகள் நன் கொடைகள்	சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்	வரவு, செலவு	மொத்தம்
2013 சனவரி 01 இல்மீதி	1,77,45,95,346	11,75,43,797	84,93,07,177	26,54,74,241	5,32,61,235	(48,11,58,895)	2,57,90,22,901
ஆண்டில்செலவிட்ட, செலவிடாத மூலதன மானியம்	44,65,79,989	13,27,90,281	-	-	-	-	57,93,70,810
தேறிய அளவு	-	-	(11,35,37,036)	-	-	-	(11,35,37,036)
நன்கொடைகளின் கடன் தீர்த்தல்	-	-	-	(1,18,86,264)	-	-	(1,18,86,264)
சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கக்கடன் தீர்த்தல்	-	-	-	-	38,88,69,33,088	-	38,88,69,33,088
காலப்பகுதிக்கான மேலதிகம் (பற்றாக்குறை)	-	-	-	-	-	21,43,39,468	21,43,39,468
நிருவாக நிதி	-	-	85,75,957	-	-	(85,75,957)	-
சுகாதார காப்புறுதி நிதிக்கு மாற்றியது	-	-	3,00,00,000	-	-	(3,00,00,000)	-
மூலதனச் செலவினம்	-	-	69,95,693	-	-	(69,95,693)	-
அமைச்சரவை நியமித்த கட்டட நிதி	-	-	2,63,97,016	-	-	(2,63,97,016)	-
நிதி மாற்றங்கள்	-	-	14,72,35,103	-	-	(14,72,35,103)	-
2013, திசெம்பர் 31இல் மீதி	2,22,11,75,335	25,03,34,618	95,49,73,910	25,35,87,977	38,94,01,94,323	(48,60,23,195)	42,13,42,42,967

உப வேந்தர்,
கொழும்பு பல்கலைக்கழகம்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2013, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2013, திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களினதும் பொழிப்புகளையும் உள்ளடக்கிய 2013, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) பிரிவு, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் பல்கலைக்கழகத்தின் அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டியதான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று பல்கலைக்கழகத்தின் உப வேந்தருக்கு 2014, நவெம்பர் 20 ஆந் திகதி வழங்கப்பட்டது.

1.2 ***நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு***

இந்நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000 -1810) அமைய இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக் கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற்கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வு நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிவு அதிகாரத்தை வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழிவுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழிவுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழிவுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2013, திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொழும்பு பல்கலைக்கழகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான பட்டப்படிப்பு மாணவர் மேலங்கி வாடகைக்கு வழங்கியதால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை சேகரிக்கப்பட்டிருந்த 16,462,244 ரூபா வருமானம் மற்றும் மீளாய்வாண்டின்போது உறப்பட்டிருந்த 1,430,010 ரூபா தொகையான செலவினம் என்பன அந்த ஆண்டுகளின் வருமானம் மற்றும் செலவினமாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக விசேட நிதியமொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) கல்வி டிப்ளோமா 2010/2011 பாடநெறியின் கற்பித்தல் நடவடிக்கைகள் 2012, திசெம்பர் 31 இல் முடிவடைந்திருந்ததுடன், அந்த பாடநெறியின் ஆசிரியர் பயிற்சியும் 2013, திசெம்பர் 06 ஆந் திகதி முடிவடைந்திருந்ததால் அந்த பாடநெறியின் வருமானத்தை தொடர்ந்தும் பிற்போடுவதற்கு தேவை ஏற்படாத போதிலும், 5,889,552 ரூபா பிற்போடப்பட்ட வருமானமாக முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

2.2.2 கணக்காய்விற்கான சான்றின்மை :

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 11,379,250,000 ரூபா கூட்டுப்பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்களின் உரித்தை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமை
(அ) 2004, சனவரி 26ஆந் திகதிய தேசிய நூலக மற்றும் ஆவண சேவைகள் சபையின் ஆலோசனை சுற்றறிக்கை இலக்கம் 2004/பூச/1 இன் 3.3பிரிவு	பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு காணாமற் போன நூலக பொருட்கள் கணக்கிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்தமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ) 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் அதிகாரச் சட்டத்தின் 6(1)(அ) பிரிவு	ஒப்பந்த உடன்படிக்கை கிரயம் 5 மில்லியன் ரூபாவை விட மேற்படும் சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு கேள்விதாரரும் பொது ஒப்பந்தப் பதிவாளரிடம் பதிவு செய்ய வேண்டிய போதிலும், 15,663,225 ரூபா பெறுமதியான ஹேவாமாவத்தை கட்டிடத்தை புதுப்பிக்கும் ஒப்பந்தத்திற்காக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.
(இ) கொள்வனவு வழிக்காட்டிக் கோவையின் 4.2.1 (சீ) பிரிவு	கொள்வனவு செயற்பாடுகள் விரிவாக உள்ளடக்கப்படும் வகையில் பிரதான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், தயாரிக்கப்பட்டிருந்த ஹேவாமாவத்தை கட்டிடத்தை புதுப்பிக்கும் நடவடிக்கை தொடர்பான ஒப்பந்தம் அத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.
(ஈ) கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.1.2 உப பிரிவு	மாதிரிப் படிவங்கள் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் உறுப்பினர்களால் கையொப்பமிட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
(உ) பல்கலைக்கழக தாபன விதிக்கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 5.2 ஆம் பிரிவு மற்றும் 2007, ஒகத்து 24 ஆந் திகதிய 09/2007 (1) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை.	அத்தியாவசியமல்லாத கல்விசாரா பதவியணியின் பதவிகளுக்காக 60 வயதுக்கு மேற்பட்ட 5 உத்தியோகத்தர்கள் அமைச்சு செயலாளரின் அங்கீகாரமின்றி நியமிக்கப்பட்டிருந்தனர்.
(ஊ) பல்கலைக்கழக தாபன விதிக்கோவையின் XXஆம் அத்தியாயத்தின் 3.1 பிரிவு மற்றும் தாபன விதிக்கோவையின் X ஆம் அத்தியாயத்தின் 1.6.1 பிரிவு	மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் கல்வி பீடத்தினதும் கலைப் பீடத்தினதும் கல்விசார் பதவியணியின் வருகை, வெளியேறல் மற்றும் விடுமுறைகளை உறுதிப்படுத்துவதற்காக பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் பேணப்பட்டிருக்காமையால் அதற்காக செலுத்தப்பட்டுள்ள கொடுப்பனவுகளை உறுதிப்படுத்த முடியவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2013, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் நிதி விளைவுகள் 214,339,468 ரூபா மிகையொன்றானதுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை 33,033,435 ரூபாவாக காணப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மிகை 181,306,033 ரூபாவால் அதிகரித்தமைக்கு அரச மானியம் 312,143,538 ரூபாவால் அதிகரித்திருந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டில் நடாத்தப்பட்டிருந்த 17 உள்ளக பரீட்சைகளினதும் 33 வெளிவாரி பரீட்சைகளினதும் பெறுபேறுகளை வெளியிடுவதில் 06 மாதங்கள் முதல் 14 மாதங்கள் வரையான காலதாமதம் அவதானிக்கப்பட்டது.

4.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

பல்கலைக்கழகத்தின் 34 விரிவுரையாளர்களிடமிருந்து உடன்படிக்கை மற்றும் பிணைப்பொறுப்பு என்பவற்றை மீறியமையால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அறவிடப்பட வேண்டிய பெறுமதி 43,086,046 ரூபா ஆக இருந்ததுடன், அது தொடர்பாக மேலும் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 7 விரிவுரையாளர்களிடமிருந்து 1,892,023 ரூபா தொகையை அறவிடுவதற்காக 1985 ஆம் ஆண்டு வழக்கு தொடரப்பட்டிருந்த போதிலும், அவர்களின் முகவரியை கண்டுபிடிக்க முடியாதுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டிருந்ததாக உபவேந்தரால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த விரிவுரையாளர்களிடமிருந்து உடன்படிக்கை மீறியமையால் அறவிடப்பட வேண்டிய பணத்தை அவர்களின் சேமலாப நிதியத்திலிருந்து கூடிய விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 94 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் உடன்படிக்கையிலுள்ள தவறு காரணமாக நிறுவகத்திற்கு பாதகமாக அர்த்தப்படுத்தப்பட்டு சேமலாப நிதியத்திலிருந்து அறவிடுவது தாமதமாக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2005 ஆம் ஆண்டில் சேவையிலிருந்து விலகிச் சென்ற விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 6,229,373 ரூபா அறவிடுவதற்காக 13 வருடங்கள் கடந்திருந்த போதிலும் இன்னும் வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் நிலைமையில் காணப்பட்டது.

4.3 நூலக நிர்வாகம்

பல்கலைக்கழகத்தின் தலைமை நூலகத்தைப் பரீட்சித்தபோது பல்கலைக்கழகத்தின் 76 விரிவுரையாளர்களால் எடுத்துச் செல்லப்பட்டிருந்த 144 புத்தகங்கள் மீள ஒப்படைக்காமல் இருந்ததுடன், நிலுவையாக இருந்த காலம் 01 மாதம் முதல் 65 மாத கால வீச்சிலும் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2013 காலப்பகுதியில் 853,563 ரூபா கிரயத்திலான காணாமல் போன 562 புத்தகங்களுக்கான நட்டத்தை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 பதவியணியினர் வெற்றிடங்கள்

மீளாய்வாண்டில் கல்விசார் மற்றும் கல்விசாராத பதவியணியில் 414 வெற்றிடங்கள் காணப்பட்டன. 23 விரிவுரையாளர்கள் கல்வி விடுமுறையினையும் 29 விரிவுரையாளர்கள் சபடிகல் விடுமுறையினையும் பெற்றுக்கொண்டிருந்தனர். மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தால் வெளி விரிவுரையாளர்களுக்காக 25,719,870 ரூபா தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கொள்வனவு நடவடிக்கைகள்
(ஆ) ஒப்பந்த நிர்வாகம்
(இ) நூலக நிர்வாகம்
(ஈ) கணக்கீடு
(உ) பாடநெறி வருமானம்

டபிள்யூ. பீ. சீ. விக்ரமரத்ன,
(பதில்) கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

8-609

அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

2015.07.08 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கி பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. "பிரசித்த நொத்தாரிசு எம். ரீ. எம். பாபிக் அத்தாட்சிப் படுத்திய 2006.11.07 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 9835 மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஈ. கே. எச். எம். கருணாதிலக அத்தாட்சிப் படுத்திய 2009.01.02 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 866 ஆகிய வற்றின் பேரில் பாணந்துறை, ஹேன்முல்ல, ஆடன் பொரஸட், இல. 32/1 ஐச் சேர்ந்த திரு. முகம்மட் முபாறக் முகம்மட் நியாஸ் என்பவரிடமிருந்து கடன் மீது 2015.05.11 வரை முதலும் வட்டியும் எண்பத்துமூன்று இலட்சத்து இருபத்தாறாயிரத்து நாநூற்று ஐம்பத்து நான்கு ரூபா நாற்பத்தாறு சதமும் (ரூ. 83,26,454.46) அத்துடன் முப்பத்தேழு இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரத்து இருநூற்றுநாற்பத்தைந்து ரூபா (ரூ. 37,95,245.00) ஆண்டுக்கு பதின்மூன்று (13%) வீதத்தில் 2015.05.12 தொடக்கம் கொடுப்பனவுத் திகதிவரை வட்டியும் மேலதிகப்பற்று மீது 2015.05.11 வரை முதலும் வட்டியும் இருபத்தெட்டு இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து எண்ணூற்று எழுபத்தொரு ரூபா அறுபத்து நான்கு சதம் (ரூ. 28,39,871.64) அத்துடன் பதினைந்து இலட்சம் ரூபாவில் (ரூ. 15,00,000) ஆண்டுக்கு பதின்நான்கு (14%) வீதத்தில் 2005.05.12 தொடக்கம் கொடுபனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. 2006.11.07 ஆந் திகதியிட்ட மேற்குறிப்பிட்ட ஈட்டு முறி இலக்கம் 9835 இன் பேரில் கடன் மீது எண்பத்துமூன்று இலட்சத்து இருபத்தாறாயிரத்து நாநூற்று ஐம்பத்து நான்கு ரூபா நாற்பத்தாறு சதம் (ரூ. 83,26,454.46) மேலதிகப்பற்று மீது இருபத்தெட்டு இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து எண்ணூற்று எழுபத்தொரு ரூபா அறுபத்து நான்கு சதம் (ரூ. 28,39,871.64) அத்துடன் 2015.05.12 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹாரை மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த T & H ஏலத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் மற்றும் அதன் தீர்மானங்களுக்கமையவும் இலங்கை வங்கிக் கட்ளைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவுக்கமையவும் இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி பாணந்துறை மேற்தரக் கிளை சிரேஷ்ட முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகிறது.".

அட்டவணை

1. மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தொட்டமுனே பாணந்துறை தல்பிட்டி தெபத்தயில் பாணந்துறை பிரதேச செயலகப் பிரிவில் பாணந்துறை பட்டினசபை எல்லைகளுள் கெஸல்வத்த, இல. 672 கிராம அலுவலர் பிரிவில் ஹேனமுல்லயில் அமைந்த ''ஆடன் பொரஸ்ட்'' என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. ஜீ. சீ. சிறிசோம தயாரித்த1998, யூன் 18 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1780 இல் விபரித்த துண்டு 70B என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு: வரைபடம் இல. 1238 இல் துண்டு 74 உம் ; கிழக்கு : வரைபடம் இல. 1238 இல் துண்டு 71 உம் ; தெற்கு : 30 அடி அகல ஒதுக்கப்பட்ட பாதையும் ; மேற்கு : வரைபடம் இல. 1780 இல் துண்டு 70A உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1780 இன் படி பதின்மூன்று பேர்ச் (0ஏ. 0றூ. 13பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலது மாகும் ஆகும். இது பாணந்துறை காணிப்பதிவகத்தில் F 527/103 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

திரு. என். டி. எல். புஷ்பகுமார
முகாமையாளர்.

பாணந்துறை மேற்தரக்கிளை,
இலங்கை வங்கி.

8- 576

மக்கள் வங்கி

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் கீழான தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் 2014, யூன் 26 ஆந் திகதி நடைபெற்ற அவர்களின் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

"ஜயந்த லக்ஷ்மன் வீரசிங்க என்பவர், மக்கள் வங்கி சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு திரு. எச். பி. எம். குணரத்ன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004.10.15 ஆந் திகதிய 328 ஆம் இலக்க, கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு திருமதி நந்தனி பெரேரா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006.11.09 ஆந் திகதிய 3882 ஆம் இலக்க ஈட்டுமுறிமீதும், கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ. ஏ. எஸ். டபிள்யூ. அமரசிங்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2002.08.27 ஆந் திகதிய 6589 ஆம் இலக்க ஈட்டுமுறி மீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலால், சொல்லப்பட்ட ஈட்டுமுறிகள் மீது ஐம்பத்தெட்டு இலட்சத்து இருபத்தாறாயிரத்து நூற்றுநாற்பத்தெட்டு ரூபா இருபத்திரண்டு சதம் (ரூ. 58,26,148.22) கொண்ட தொகை இப்பொழுது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியு முள்ளதாதலாலும், மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை, 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டாவாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தினால் அவர்களுக்குரித்தாக்கப்பட்ட தத்துவத்தின் கீழ் சொல்லப்பட்ட 328, 3882 மற்றும் 6589 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மூலம் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டஆதனமும் வளவுகளும் இருபத்தெட்டு இலட்சத்து எழுபதினாயிரத்து தொளாயிரத்து அறுபத்தேழு ரூபா இருபத்தொரு சதம் (ரூ. 28,70,967.21) கொண்ட தொகையையும் பன்னிரண்டு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா (ரூ. 12,25,000) கொண்ட தொகை மீது 2014.06.01 முதல் ஆண்டொன்றுக்கு 18.5% மற்றும் பதினாறு இலட்சத்து நாற்பத்தையாயிரத்து தொளாயிரத்து அறுபத்தேழு ரூபா இருபத்தொரு சதம் (ரூ. 16,45,967.21) கொண்ட தொகைமீது 2014.06.01 முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு 25% மேலதிக வட்டியையும் செலவுத் தொகைகளையும் வேறு விற்பனை இறுப்பனவுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் (எவையேனும்) பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக, கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஈ. எஸ். ராமநாயக்க அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.".

அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தின் சல்பிட்டிக் கோறளையின் பள்ளே பத்துவில் கெஸ்பாவ பிரதேச சபை எல்லைகளினுள் ஹொன்னானதரக் கிராமத்தில் அமைந்துள்ளதும், "கொடபரகஹாலந்த மற்றும் கஹட்டகஹாலந்த" எனவழைக்கப்பட்டு அறியப்பட்ட காணியினதாய் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். லால் குணசேக்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட1982, திசெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட 501 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், ''காணித்துண்டம் 04'' என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும். சொல்லப்பட்ட "காணித்துண்டம் 04" இன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கு : 501 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டங்கள் 2, 9 மற்றும் 3 ; கிழக்கு : சோமா வீரசிங்கவின் காணி ; தெற்கு : 501 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டங்கள் 5 மற்றும் 7 மற்றும் ; மேற்கு : மேற்கூறப்பட்ட வரைபடத்தில் காணித்துண்டங்கள் 7, 8 மற்றும் 2; பரப்பளவில் இது. அதன்மீதுள்ள கட்டிடங்கள், பயிர்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் ஒரு றூட் எட்டு தசம் ஐந்து பேர்ச் (0ஏ. 1றூ. 8.5பே.) கொண்டுள்ளதுடன்,

நுகேகொடைக் காணிப் பதிவகத்தில் M 2389/38 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
(கொழும்பு தெற்கு).

மக்கள் வங்கி,
பிரதேச பிரதான அலுவலகம்,
(மேற்கு வலயம் 01),
இல. 11, டியூக் வீதி,
கொழும்பு 01.

3-616

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்களினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

(கிரிபத்கொடை கிளை) -வாடிக்கையாளரின் பெயர்: மாகலகே நந்தசிறி

2015 ஆம் ஆண்டு யூன் 24 ஆந் திகதியன்று நடைபெற்ற பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப.வ.க. இன் பணிப்பாளர் சபை கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது :-

"கடப்பாடுடையவரான/ஈடுவைத்தவரான மாகலகே நந்தசிறி முன்னர் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி மற்றும் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் என அறியப்பட்ட பதிவு இல. பீகியூ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப. வ. க. இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு எம்.கே. சூரியஆரச்சி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2014, யூன் 10 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 324 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதாத லாலும்,

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. (இதனகத்துப் பின்னர் சில வேளைகளில் "வங்கி" என அழைக்கப்படும்) இற்கு சொல்லப்பட்ட முறி இலக்கம் 324 இன் மூலம் 2015.05.26 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதி வரை எழுபத்தொரு இலட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து எண்ணூற்று இருபது ரூபா எழுபது சதம் (ரூ. 71,48,820.70) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு இருபத்துநான்கு வீத (24%) வட்டியுடனும் சேர்த்து பணமுதல் கணக்கின் மீது எழுபத்தொரு இலட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து எண்ணூற்று இருபது ரூபா எழுபது சதம் (ரூ. 71,48,820.70) கொண்ட தொகை மற்றும் 2015.05.25 ஆந் திகதிவரையான வட்டியும் தற்போது வரவேண்டியும் உரியதாகவுள்ளதாதலாலும்,

சொல்லப்பட்ட முறி இலக்கம் 324 இன் மீது வரவேண்டிய சொல்லப்பட்ட தொகை எழுபத்தொரு இலட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து எண்ணூற்று இருபது ரூபா எழுபது சதம் (ரூ. 71,48,820.70) ஐ, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய பணங்கள் மற்றும் செலவுகள் மற்றும் மேற்கூறப்பட்ட திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை வட்டியுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள மற்றும் முதன்மை ஈட்டுமுறி இல. 324 இன் மூலம் மாகலகே நந்தசிறியினால் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்ய, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க , வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், கொலன்னாவை, விஹார மாவத்தை, இல. 182/3 (50/3) ஐச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் துசித்த கருணாரத்ன அவர்களுக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கிறதென இத்தால் தீர்மானிக்கின்றது.".

அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம் (கம்பஹா பதிவுப் பிரிவிற்குள்), சியனே கோறளை, அதிகாரி பற்று, பியகமை-தெல்கொடை பிரதேச சபை எல்லைகளுக்குள், பியகம பிரதேச செயலாளர் பிரிவிற்குள், 271ஏ சப்புகஸ்கந்தை கிராம அலுவலர் பிரிவினுள் மாக்கொலை தெற்கில் அமைந்துள்ளதும் பட்டலந்தை வீதி, வரிமதிப்பு இல. 22ஏ ஐக் கொண்டதும் "திவுலகஹவத்தை" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். சீ. எப்பாசிங்ஹ அவர்களால் தயாரிக்கப்பட்டு 2010, ஏப்பிறல் 04 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1107 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 2ஏ (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. சீ. கொத்தலாவல அவர்களால் தயாரிக்கப்பட்டு 1990, பெப்புருவரி, 17 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 35/90 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 2 இல் இருக்கின்ற எல்லைகளின் ஒரு மீள்நிலஅளவையாகவிருக்கின்ற) என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு 2ஏ இன் எல்லைகளாவன - வடக்கு : பட்டலந்த வீதி ; கிழக்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வீ. எவ். ஜே. பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்டு 1981.04.01 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 7674 இல் துண்டு 3 ; தெற்கு : ஹப்புஆரச்சிகே பேபி நோனா மற்றும் ஏனையோராலும் முன்னர் உரிமைகோரப்பட்ட காணி; மேற்கு : உத்தரவுபெற்ற நில அளவையாளர் டி. சீ. கொத்தலாவலஅவர்களால் தயாரிக்கப்பட்டு 1990, பெப்புருவரி 17 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 35/90 இல் துண்டு 1. இது, சொல்லப்பட்ட வரைபடம் இல. 1107 இற்கமைய பதின்மூன்று தசம் இரண்டு ஏழு பேர்ச்சு (0ஏ. 0றூ. 13.27பே.) விஸ்தீரணமுடையது.

சொல்லப்பட்ட துண்டு 2ஏ பின்வரும் காணியின் ஒரு மீள் நிலஅளவையாகும் :-

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம் (கம்பஹா பதிவுப் பிரிவிற்குள்), சியனே கோறளை, அதிகாரி பற்று, பியகமை-தெல்கொடை பிரதேச சபை எல்லைகளுக்குள், பியகம பிரதேச செயலாளர் பிரிவிற்குள், 271ஏ சப்புகஸ்கந்தை கிராம அலுவலர் பிரிவினுள் மாக்கொலை தெற்கில் அமைந்துள்ளதும் "திவுலகஹவத்தை" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி.சீ. கொத்தலாவலை அவர்களால் தயாரிக்கப்பட்டு 1990, பெப்புருவரி 17 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 35/90 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 2 என அடையாளமிடப்பட்டது பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு 2 இன் எல்லைகளாவன - வடக்கு : பட்டலந்த வீதி ; கிழக்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வீ. எவ். ஜே. பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்டு 1981.04.01 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 7674 இல் துண்டு 3; தெற்கு : ஹப்புஆரச்சிகே பேபி நோனா மற்றும் ஏனையோரின் காணி;

மேற்கு : துண்டு 1. இது, சொல்லப்பட்ட வரைபடம் இல. 35/ 90 இற்கமைய பதின்மூன்று தசம் இரண்டு ஏழு பேர்ச்சு (0ஏ. 0றூ. 13.27பே.) விஸ்தீரணமுடையது. கம்பஹா காணிப் பதிவகத்தில் தலைப்பு என் 97/47 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

உதித்த கொடிக்கார,
முகாமையாளர் - அறவீடுகள்

8-570

இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

2015.06.25 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கி பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. "பிரசித்த நொத்தாரிசு எஸ். டி. பெரேரா அத்தாட்சிப்படுத்திய 2012, செத்தெம்பர் 11 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 631 இன் பேரில் ஹொரணை, கனன்வில,கஹூட்டபிட்டியைச் சேர்ந்த திருவாளர்கள் சமந்தா என்ரபிறைசஸிடமிருந்து (ஏக உரிமையாளர்: திரு. குகுலகே டொன் ஜனக புஸ்பகுமார அதாவது குகுலகே ஜனக புஸ்பகுமார என யாவரும் அறிந்த) 2015.04.26 ஆந் திகதிய வரை முதலும் வட்டியும் தொண்ணூறு இலட்சத்து எழுபத்தேழாயிரத்து தொளாயிரத்து அறுபத்தைந்து ரூபா ஆறு சதம் (ரூ. 90,77,965.06) அத்துடன் எண்பது இலட்சத்து எழுபத்து மூவாயிரத்து ஐநூற்று முப்பத்தெட்டு ரூபா அறுபத்தைந்து சதம் (ரூ. 80,73,538.65) ஆண்டுக்கு பதின்மூன்று (13%) வீதத்தில் 27.04.2015 தொடக்கம் கொடுப்பனவுத் திகதிவரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. 2012.09.11 ஆந் திகதியிட்ட ஈட்டு முறிஇல. 631 இன் பேரில் கடன் மீது தொண்ணூறு இலட்சத்து எழுபத்தேழாயிரத்து தொளாயிரத்து அறுபத்தைந்து ரூபா ஆறு சதம் (ரூ. 90,77,965.06) அத்துடன் 27.04.2015 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/ 3, விஹாரை மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த T & H ஏலத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம்அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்கு அமையவும் இலங்கை வங்கிக்கட்டளைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவுக்கமையவும் இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடு வதற்கு இலங்கை வங்கி ஹொரணைக் கிளை சிரேஷ்ட முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகிறது.".

அட்டவணை

1. மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், ஹொரணை பிரதேச செயலகப் பிரிவில் ஹொரணை பிரதேச சபை எல்லைகளுள் (கனன்வில உப அலுவலகம்) ரய்கம் கோறளை, கும்புகே பற்றுவில், குடா உடுவ, கிராம அலுவலர் பிரிவு இல. 614C இல் உடுவ கிராமத்தில் அமைந்த "அம்பிட்டிய" என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. கன்னங்கர தயாரித்த 1996, ஏப்பிறல் 02 ஆந் திகதியிட்ட வரைபடம்இல. 296/ 1996 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : பிரதான வீதியும் ; கிழக்கு : துண்டுகள் 6, 7 ஆகியவற்றின் 1/4 பாகமும் ; தெற்கு: டபிள்யூ. பீ. எபிஸ் சிங்யோவின் ஆதனமும் ; மேற்கு : துண்டுகள் 2 ஆம், 5 ஆம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 296/ 1996 படி ஒரு ஏக்கர் ஒரு றூட் முப்பத்தேழு பேர்ச் (1ஏ. 1றூ. 37பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும் ஆகும். இது ஹொரணை காணிப்பதிவகத்தில் C 195/35 இல் பதிவு செய்யப்பட்டது.

2. மேற்குறிப்பிட்டவாறு உடுவ கிராமத்தில் அமைந்த "அம்பிட்டிய" என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. கன்னங்கர தயாரித்த 1996, ஏப்பிறல் 02 ஆந் திகதியிட்ட வரைபடம்இல. 296B/ 1996 இல் விபரித்த துண்டு 3 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : பிரதான வீதியும் ; கிழக்கு : துண்டுகள் 8, 9 ஆகியவற்றின் 3/ 4 பாகங்களும் (மிகவும் சரியானது துண்டு 8, 9 இன் 3/4 பகுதி) ; தெற்கு : டபிள்யூ. டீ. எபிஸ் சிங்யோவினதும் ஏனையோரதும் ஆதனமும் ; மேற்கு : துண்டுகள் 6, 7 இன் 1/ 4 பாகமும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 296B/1996 இன்படி மூன்று றூட் முப்பத்தேழு பேர்ச் (0ஏ. 3றூ. 37பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும் ஆகும். இது ஹொரணை காணிப்பதிவகத்தில் C 195/36 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

திரு. வீ. டி. ஜயலத்,
சிரேஷ்ட முகாமையாளர்.

இலங்கை வங்கி,
ஹொரணை.

8- 574

இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

2015.07.08 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கி பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. "பிரசித்த நொத்தாரிசு டி. கித்துல்கொட அத்தாட்சிப்படுத்திய 2010, ஏப்பிறல் 26 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 1955, 2011.03.24 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 2651 மற்றும் 2011.12.13 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 3168 மற்றும் பிரசித்த நொத்தாரிசு டி. வீரசூரிய அத்தாட்சிப்படுத்திய 2012.11.19 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 2009 ஆகியவற்றின் பேரில் வாதுவ, ஸ்டேஷன் வீதி, இல. 01 என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் சிசிர கிரைண்டிங் மில்லிடமிருந்து (ஏக உரிமையாளர்: வாதுவ, உபாலி மாவத்தை, இல. 4/ 11 ஐச் சேர்ந்த திரு. ஹேவனஹன்னடிகே குணருவன் சிசிர பெர்ணாண்டோ) முதலாவது மேலதிகப்பற்று மீது 2015.05.11 வரை முதலும் வட்டியும் ஒரு கோடியே இரண்டு இலட்சத்து முப்பத்தாறாயிரத்து

இருநூற்று எழுபத்துமூன்று ரூபா தொண்ணூற்று ஏழு சதம் (ரூ. 1,02,36,273.97) அத்துடன் எண்பது இலட்சம் ரூபா (ரூ. 80,00,000) ஆண்டுக்கு பதினான்கு (14%) வீதத்தில் 2015.05.12 தொடக்கம் கொடுப்பனவுத் திகதிவரை வட்டியும் இரண்டாவது மேலதிகப் பற்று மீது 2015.05.11 வரை முதலும் வட்டியும் எண்பத்துமூன்று இலட்சத்து பதினாறாயிரத்து தொளாயிரத்து எழுபத்திரண்டு ரூபா அறுபத்தொரு சதம் (ரூ. 83,16,972.61) அத்துடன் அறுபத்தைந்து இலட்சம் ரூபாவில் (ரூ. 65,00,000) ஆண்டுக்கு பதினான்கு (14%) வீதத்தில் 2015.05.12 தொடக்கம் கொடுப்பனவுத் திகதிவரை வட்டியும் கடன் மீது 2015.05.11 வரை முதலும் வட்டியும் பதினான்கு இலட்சத்து பதினேழாயிரத்து இருநூற்று முப்பத்தாறு ரூபா தொண்ணூற்று ஏழு சதம் (ரூ. 14,17,236.97) அத்துடன் பதினொரு இலட்சம் ரூபா (ரூ. 11,00,000) ஆண்டுக்கு பதின்மூன்று (13%) வீதத்தில் 2015.05.12 தொடக்கம் கொடுப்பனவுத் திகதிவரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. 2010.04.26 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 1955, 2011.03.24 ஆந் திகதியிட்ட முறி இல. 2651, 2011.12.13 ஆந் திகதியிட்ட முறி இல. 3168 மற்றும் 2012.11.19 ஆந் திகதியிட்ட முறி இல. 2009 ஆகியவற்றின் பேரில் வருமதியாக உள்ள முதலாவது மேலதிகப்பற்று மீது ஒரு கோடியே இரண்டு இலட்சத்து முப்பத்தாறாயிரத்து இருநூற்று எழுபத்துமூன்று ரூபா தொண்ணூற்று ஏழு சதம் (ரூ. 1,02,36,273.97) இரண்டாவது மேலதிகப்பற்று மீது எண்பத்துமூன்று இலட்சத்து பதினாறாயிரத்து தொளாயிரத்து எழுபத்திரண்டு ரூபா அறுபத்தொரு சதம் (ரூ. 83,16,972.61) கடன் மீது பதினான்கு இலட்சத்து பதினேழாயிரத்து இருநூற்று முப்பத்தாறு ரூபா தொண்ணூற்று ஏழு சதங்களும் (ரூ. 14,17,236.97) அத்துடன் 2015.05.12 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹாரை மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த T & H ஏலத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) அதன் திருத்தங்களுக்கும் அமையவும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி பாணந்துறை மேற்தரக் கிளை சிரேஷ்ட முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகிறது.''.

அட்டவணை

1. மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை பிரதேச செயலகப் பிரிவில் பாணந்துறை தொட்டமுனே வாது வஸ்கடு தெபத்தயில் பாணந்துறை பிரதேச சபை எல்லைகளுள் (வாதுவ உப அலுவலகம்) வாதுவமேற்கு, இல. 699 கிராம அலுவலர் பிரிவில் மஹவாதுவ மேற்கில் அமைந்த ''முதில்லகஹவத்த அல்லது கொடகம்தெமுதில்லகஹாவத்த மற்றும் கொடகண்டமுடில்லகஹவத்தயின்'' துண்டு B என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். டி. எப். பொன்சேகா தயாரித்த 1994, யூலை 26 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1272 இல் விபரித்த துண்டு 6 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : வரைபடம் இல. 1272 இல் அதே காணியின் துண்டு 5 பாதையும் ; கிழக்கு : வரைபடம் இல. 1272 இல் அதே காணியின் துண்டு 7 ஆம் ; தெற்கு : பயுருகஹவத்தயும் ; மேற்கு : புகையிரதப்பாதை நெடுகவும் ஒதுக்கப்பட்டதும் எல்லைகளாகக் கொண்டு பதினைந்து தசம் ஏழு ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 15.75பே.) விஸ்தீரணமுடையது. இக் காணி பாணந்துறை காணிப்பதிவகத்தில் G 159/25 இல் பதிவு செய்யப்பட்டது.

2. மேற்குறிப்பிட்ட மஹவாதுவயில் அமைந்த ''முதில்லகஹவத்த அல்லது கொடகம்தெமுதில்லகஹாவத்த மற்றும் கொடகண்டமுடில்ல கஹவத்தயின்'' துண்டு B என அழைக்கப்படும் காணியின் வரைபடம் இல. 1272 இல் விபரித்த துண்டு 5 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : துண்டு 4 உம் புகையிரதப் பாதைக்கு ஒதுக்கப்பட்டதும் ; கிழக்கு: துண்டுகள் 3 உம், 8 உம் ; தெற்கு : புகையிரதப் பாதைக்கு ஒதுக்கப்பட்டதும் துண்டுகள் 8 உம், 7 உம், 6 உம் ; மேற்கு : பாதையும் எல்லைகளாகக் கொண்டு மூன்று தசம் மூன்று ஒன்று பேர்ச் (0ஏ. 0றூ. 3.31பே.) விஸ்தீரணமுடையது. இக் காணி பாணந்துறை காணிப்பதிவகத்தில் G 101/264 இல் பதிவு செய்யப்பட்டது.

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை பிரதேச செயலகப் பிரிவில் பாணந்துறை பிரதேச சபை எல்லைகளுள் (வாதுவ உப அலுவலகம்) பாணந்துறை தொட்டமுனே வாது வஸ்கடு தெபட்டயில் வாதுவ மேற்கு இல. 699 கிராம அலுவலர் பிரிவில் மஹவாத்துவ மேற்கில் அமைந்த ''ஜம்புகஹவத்த தெற்கில் நான்கில் ஒரு பகுதி'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவைாளர் எல். பீ. லியனகே தயாரித்த 2012, மே 21 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 457 இல் விபரித்த துண்டு A என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : கே.சைமன் பெர்னான்டோ, டி. மெனுவல் பெர்னான்டோ மற்றும் ஏனையோர் உரிமை கோரும் காணியும் ; கிழக்கு : வரைபடம் இல. 11252 இல் துண்டு 1 உம் ; தெற்கு : வரைபடம் இல. 3802 இல் துண்டு 3 உம் (3 அடி அகலமான பாதை) ; மேற்கு : பாதையும் (10 அடி அகலமானது) எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 457 இன் முப்பது பேர்ச் (0ஏ. 0றூ. 30பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இக் காணி பாணந்துறை காணிப்பதிவகத்தில் G 246/24 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்டவாறு மஹவாத்துவ மேற்கு கிராமத்தில் அமைந்த ''ஜம்புகஹவத்த தெற்கில் நான்கில் ஒரு பகுதி'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவைாளர் ஏ. எம். ஆர். ஜயசேகர தயாரித்த 2012, யூன் 11 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 7926 இல் விபரித்த துண்டு 1C (ஒதுக்கப்பட்ட பாதை) என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கு : துண்டு 1B உம் ; கிழக்கு: வரைபடம் இல. 11252 இல் துண்டு 1A உம் ; தெற்கு : வரைபடம் இல. 3802 இல் துண்டு 3 உம் (3 அடி அகலமாக பாதை) ; மேற்கு : புகையிரதப் பாதைக்கு ஒதுக்கப்பட்டதும் எல்லைகளாகக் கொண்டு ஆறு பேர்ச் (0ஏ. 0றூ. 6பே.) விஸ்தீரணமுடையது. இக் காணி பாணந்துறை காணிப்பதிவகத்தில் G 246/25 இல் பதிவு செய்யப்பட்டது.

அத்துடன் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. அகங்கம தயாரித்த 1986, நவெம்பர் 19 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 3802 இல் துண்டு 3 (3 அடி அகலமுடையது) என அடையாளமிட்ட பாதையை உபயோகிப்பதற்கு உரிமையும் ஆகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

என். டி. எல். புஷ்பகுமார,
முகாமையாளர்.

பாணந்துறை மேற்தரக்கிளை,
இலங்கை வங்கி.

8- 575